ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீகமலவல்லி நாயகி ஸமேத ஸ்ரீஅழகியமணவாள பரப்ரஹ்மணே நம:



(உறையூர் “நம்நாச்சியார்” கமலவல்லி)

ஸ்ரீபாஞ்சராத்ர ஆகம நூலான

# ஸ்ரீலக்ஷ்மீ தந்த்ரம்

(ஆறாம் அத்யாயம்)

இதற்கான ச்லோகம் மற்றும் பொருள் – தமிழில்

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்
ஸ்ரீஅஹோபிலதாஸன் க. ஸ்ரீதரன்
Email: sridharan_book@yahoo.com

6-1 பூர்ணஸ்திம் இத ஷாட்குண்ய சித் ஆனந்த மஹோததே:
அஹம்தா அஹம் ஹரேராத்யா நிஸ்தரங்கார்ணவ ஆக்ருதே:

**பொருள்** – மஹாலக்ஷ்மி கூறுவது: ஞானம் முதலான ஆறு குணங்கள் பரிபூர்ணமாக நிரம்பிய ஸர்வேச்வரனின் “அஹம்” என்ற எண்ணத்திற்கும் நானே ஆதாரமாக உள்ளேன். அந்த ஸ்ரீஹரியானவன் ஞானம், ஆனந்தம் முதலானவற்றுக்கு அலைகள் இல்லாத ஸமுத்திரம் போன்றுள்ளான்.

6-2 ஸ அஹம் ஏவம் விதா சுத்தா க்வசித் உச்சூநதாம் கதா
ஸிஸ்ருக்ஷா லக்ஷணா தேவீ ஸ்வதந்த்ரா ஸச்சிதாத்மிகா
6-3 ஷட்கோசதாம் ஸமாபத்யே ஸத்தாஹம் வைஷ்ணவீ பரா
சக்திர்மாயா ப்ரஸூதிச்ச ப்ரக்ருதி: த்ரிகுணாத்மிகா
6-4 ப்ரஹ்மாண்டம் ஜீவதேஹச்சேத்யேதே ஷட்கோசஸஞ்ஜிதா:
ஸிஸ்ருக்ஷா யா பரா விஷ்ணோரஹம்தாயா: ஸமுத்கதா

**பொருள்** – நான் தூய்மையே வடிவம் ஆனவள், சாந்தமானவள், ஆனந்தமயமானவள், ஞானமயமானவள் ஆவேன். ஸ்ருஷ்டி செய்யவேண்டும் என்ற ஆவல் எனக்கு உண்டாகும்போது, விஷ்ணுவின் அங்கமாகவே உள்ள நான், ஆறு கோசங்களாக வடிவெடுக்கிறேன் (கோசம் என்பதை ஒருவிதமான சரீரம் என்று கூறலாம்). இவையாவன – சக்தி, மாயா, ப்ரஸூதி, மூன்று குணங்களுடன் கூடிய ப்ரக்ருதி, ப்ரம்மாண்டம் மற்றும் ஜீவசரீரங்கள் ஆகும். இவையே ஆறு கோசங்கள் எனப்படும். ஸ்ரீஹரியின் “அஹம்” என்ற எண்ணத்தில் இருந்து ஸ்ருஷ்டிக்க வேண்டும் என்னும் ஆவல் ஏற்படுகிறது.

6-5 சக்தி: ஸா ப்ரதம: கோச: சுத்தமார்க்க ப்ரவர்த்தநீ
கோச: குலாயபர்யாய: சரீராபரநாமவாந்

**பொருள்** - இந்த ஆறு கோசங்களில் சக்தி என்பது முதன்மையான கோசமாகும். இது தூய்மையான ஸ்ருஷ்டியின் அடிப்படையாக உள்ளது. கோச என்ற பதம் குலாயம் (கூடு) என்னும் பொருளை அளிப்பதாகும். அது சரீரம் என்பதன் வேறு பெயர் ஆகும்.

6-6 சுத்தே அஸ்மிந் ப்ரதமே கோசே ப்ரதம உந்மேஷ லக்ஷணே
அஹம்மாநீ பரோ ஹி ஆசீத் ஏவ ஸங்கர்ஷணா: ப்ரபு:

**பொருள்** - ஸ்ருஷ்டியின் செயல்பாட்டை முதலில் தெரிவிப்பது முதல் கோசமாகும். இந்த தூய்மையான முதல் கோசத்தில் ஸங்கர்ஷணனின் அம்சம் வெளிப்பட்டபடி உள்ளது.

6-7 திலகாலகவத்தத்ர விகாரோ மஸ்ருணா: ஸ்தித:
தஸ்ய அஹந்தா து யா தேவீ ஸ அஹம் ஸங்கர்ஷணீ பரா

**பொருள்** – மனித உடலில் காணப்படும் மச்சங்கள் எவ்விதம் எந்தச் செயலும் செய்யாமல் உள்ளனவோ அது போன்று ஸங்கர்ஷணனின் திருமேனியில் அனைத்து ஸ்ருஷ்டிகளும் முதலில் செயலற்று உள்ளன. ஸங்கர்ஷணனின் ”நான்” என்ற எண்ணமாக நானே (மஹாலக்ஷ்மி) உள்ளேன். இந்த நிலையில் நான் மிகவும் உயர்ந்த ஸங்கர்ஷணீ எனப்படுகிறேன்.

6-8 ஸ்ரீரித்யேவ ஸமாக்யாதா விஜ்ஞாநபலசாலிநீ
யஸ்தஸ்யா மே ஸமுந்மேஷ: ப்ரத்யும்ந: ஸது கீர்த்யதே

**பொருள்** – ”ஸ்ரீ” என்று கூறப்படும் நிலையில் உள்ளபோது விஜ்ஞாநமும் பலமும் நிறைந்தவளாக நான் உள்ளேன். அப்படிப்பட்ட எனது ”ஸ்ரீ” நிலையில் இருந்து ப்ரத்யும்நன் வெளிப்படுகிறான்.

6-9 ஸங்கர்ஷணஸ்ய தேவஸ்ய சக்திகோசாபிமாநிந:
புத்தித்வே வர்த்த்தே தேவ: ப்ரத்யும்ந: புருஷோத்தம:

**பொருள்** - சக்தி கோசத்தின் அபிமான தேவதையாக ஸங்கர்ஷணன் உள்ளான். அவனது புத்தியாக ப்ரத்யும்நன் உள்ளான். இந்தப ப்ரத்யும்நனே புருஷோத்தமன் என்றும் கூறப்படுகிறான்.

6-10 போக்த்ரு போக்ய ஸமஷ்டிஸ்து நிலீநா தத்ர திஷ்டதி
மநோ பூதஸ்ய தேவஸ்ய தஸ்ய அஹந்தா து யா ஸ்ம்ருதா

**பொருள்** - அந்த ப்ரத்யும்நனிடம் அனுபவிக்கப்படும் பொருள்கள், அனுபவிக்கும் பொருள்கள் என்ற பலவும் செயலற்ற நிலையில் ஒடுங்கி உள்ளன. மனதின் அபிமான தேவதையாக உள்ள ப்ரத்யும்நனின் “நான்”என்ற எண்ணமாக நானே உள்ளேன்.

6-11 ஸாஹம் ஸரஸ்வதீ நாம வீர்ய ஐச்வர்ய விவர்த்திநீ
யோ மே தஸ்யா: ஸமுந்மேஷ: ஸ: அநிருத்த: ப்ரகீர்த்தித:

**பொருள்** - வீர்யமும் ஐச்வர்யமும் நிரம்பிய எனது நிலையானது ஸரஸ்வதி எனப் பெயர் பெறும். இத்தகைய ஸரஸ்வதி என்ற நிலையில் இருந்து வெளிப்படும் எனது நிலை அநிருத்தன் என்பதாகும்.

6-12 தஸ்ய ஸங்கர்ஷணஸ்ய அஹம் அஹங்காரவிதௌ ஸ்திதா
ஸங்கர்ஷணாதயோ தேவாஸ்த்ரய ஏதே புராதநா:
6-13 ஜீவோ புத்திரஹங்கார இதி நாம்நா ப்ரகீர்த்திதா:
நைவைதே ப்ராக்ருதா தேவா: கிந்து சுத்தசிதாத்மகா:

**பொருள்** – இத்தகைய எனது அநிருத்த நிலையானது ஸங்கர்ஷணனின் அஹங்காரமாக உள்ளது. ஸங்கர்ஷணனின் தலைமையில் உள்ள இந்த மூன்று நிலைகளும் ஜீவன் (ஸங்கர்ஷணன்), புத்தி (ப்ரத்யும்நன்), அஹங்காரம் (அநிருத்தன்) எனப்படுகின்றன. இந்த மூன்றும் இந்த உலகிற்கு அடங்கியவை அல்ல (மூன்று குணங்களின் பாதிப்புக்கு உட்படாதவை). இவை மிகவும் தூய்மையானவை ஆகும்.

6-14 ஆதிவ்யூஹஸ்ய தேவஸ்ய வாஸுதேவஸ்ய தீவ்யத:
தத்தத்கார்ய கரத்வேந தத்தந்நாம்நா நிரூபிதா:

**பொருள்** – ஆதிதேவனாகிய பகவான் வாஸுதேவனின் லீலை காரணமாக மற்ற மூன்று வ்யூஹங்களும் அவரவர்களின் செயல்களுக்கு உரியபடி பெயர்களைப் பெறுகின்றனர்.

6-15 ஸர்வே தே ஷட்குணா: ப்ரோக்தா: ஸர்வே தே புருஷோத்தமா:
பூர்ணஸ்திமித ஷாட்குண்ய ஸதாநந்த மஹோததே:

**பொருள்** - அந்த வ்யூஹங்கள் அனைவரும் ஆறு திவ்யமான குணங்களை உடையவர்கள் (ஒவ்வொரு வ்யூஹமும் இரண்டு குணங்கள் கொண்டவர்கள்) என்பதால், அவர்கள் புருஷோத்தமர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். இவர்களில் ஒருவருக்கு மட்டும் ஆறு குணங்களும் பரிபூர்ணமாக எப்போதும் வெளிப்பட்டபடி உள்ளது.

6-16 ஷண்ணாம் யுகபத் உந்மேஷோ குணாநாம் கார்ய வத்தயா
ய: அபூத்ஸ வாஸுதேவஸ்து வ்யூஹ: ப்ரதமகல்பித:

**பொருள்** – இந்த ஒருவன் ஆனந்தமயமான கடலாகிய ஆறு குணங்களில் இருந்து வெளிப்பட்டவன் ஆவான். அவன் வாஸுதேவன் எனப்படுகிறான்.

6-17 தஸ்ய சாந்திரஹந்தா து ஸாஹம் சக்தி: ப்ரகீர்த்திதா
சக்திகோசஸ்திதா தேவா: ஸூயந்தே யத்ர சிந்திதா:

**பொருள்** - வாஸுதேவனின் நான் என்ற எண்ணமாக, அவனது பத்னியாக, சாந்தி என்பவளாக நானே உள்ளேன். இந்த நிலையில் சக்தி என்று நான் அழைக்கப்படுகிறேன். இந்த நிலையில் நான் மூன்று வ்யூஹங்களின் (ஸங்கர்ஷணன், ப்ரத்யுமநன், அநிருத்தன்) ஆதாரமாக உள்ளேன்.

6-18 அநிருத்தஸ்ய யாஹந்தா ரதி: இதி ஏவ ஸஞ்ஜிதா
ஸ ஏவ தேவீ மஹாலக்ஷ்மீர் மயாகோச: ஸ உச்யதே

**பொருள்** – அநிருத்தனின் "நான்" என்ற எண்ணமாக, ரதி என்பவளாக, நானே உள்ளேன். இந்த நிலையில் என்னை மஹாலக்ஷ்மியுடன் தொடர்புபடுத்துவர். அவளை மாயாகோசம் என்பர்.

6-19 மஹாலக்ஷ்ம்யா ய உந்மேஷோ மாயாயா குண ஸஞ்ஜிதா
மஹாகாளீ மஹாவித்யா த்வயம் ஸம்பரிகீர்த்யதே

**பொருள்** - மஹாலக்ஷ்மியின் இயக்க நிலைகளுக்கு மஹாகாளி மற்றும் மஹாவித்யா என்ற பெயர்கள் உள்ளன. இவை அவளது மாயையின் குணங்களாக உள்ளன.

6-20 மஹாலக்ஷ்மீ மஹாமாயா மஹாவித்யாமயோ மஹாந்
ப்ரஸூதிர் நாம கோசோ மே த்ருதீய: பரிபட்யதே

**பொருள்** - ப்ரஸூதி என்னும் கோசமானது மிகவும் உயர்ந்ததாகும். இந்த நிலையானது மஹாலக்ஷ்மி, மஹாமாயா மற்றும் மஹாவித்யா ஆகிய நிலைகளைத் தன்னுள் அடக்கியது ஆகும்.

6-21 த்ரீண்யத்ர மிதுநாந்யாஸந் யாநி பூர்வோதிதாநி தே
ப்ரதாநம் ஸலிலீக்ருத்ய யச்சேதே பூருஷோத்தம:
6-22 ஸா ப்ரோக்தா ப்ரக்ருதிர் யோநிர் குணஸாம்ய ஸ்வரூபிணீ
விரிஞ்ச: அஜநயத்யத்வை பூர்வபண்டம் ஸ்வம் ஆத்மநி

**பொருள் -** ப்ரஸூதி கோசத்தில், நான் முன்பு கூறிய மூன்று ஜோடிகள் உள்ளன. (5 ஆம் அத்யாயம் ச்லோகங்கள் 8-15 காண்க). அந்த ப்ரதானம் என்பது நீராக மாற்றப்பட்டு, அதில் புருஷோத்தமன் சயனித்துள்ளான். இதுவே ப்ரக்ருதி எனப்படுகிறது. இந்த ப்ரக்ருதியில் மூன்று குணங்களும் சமநிலையில் உள்ளன. அவனிடம் இருந்து உருவானதும், அவனையே அடக்கியதும், அவனிலே அடங்கி இருப்பதும் ஆகிய பேரண்டம் என்பது அறிவாளிகளால் ப்ரக்ருதி எனப்படுகிறது. இது தொடக்கத்தில் விரிஞ்சி எனப்படும் நான்முகனால் கொண்டாடப்படுகிறது.

6-23 தத் ஏக ப்ரக்ருதிம் ப்ராஹுஸ் தத்த்வ சாஸ்த்ர விசாரதா:
மஹதாத்யை: ப்ருதிவ்யந்தைரண்டம் யத் நிர்மிதம் ஸஹ
6-24 தத் ப்ரஹ்மாண்டம் இதி ப்ரோக்தம் யத்ர ப்ரஹ்மா விராடபூத்
அங்க ப்ரத்யங்கயுக்தம் யத் சரீரம் ஜீவிநாமிஹ
6-25 ஏஷா கோசவிதா ஷஷ்டீ க்ரமசாஸ்தநுதாம் கதா
அவரோஹா: ஷடேதே மே பூர்ணாயா: பரிகீர்த்திதா:

**பொருள் –** ஸ்ருஷ்டியின்போது பேரண்டமானது மஹத் தொடங்கி ப்ருத்வி முடிய பலவாக உள்ளடக்கிய ப்ரம்மாண்டமாகிறது. அந்த அண்டத்தை ஆச்ரயித்து நான்முகன் உண்டானான் (அல்லது அந்த அண்டத்தின் அதிகாரியாக நான்முகன் தோன்றினான் எனலாம்). ஆறாவதாக உள்ள அந்த கோசமானது உடல் உறுப்புக்களுடன் கூடியதாகவும், ஸ்தூல சரீரங்களுடன் கூடியதாகவும் உள்ள உயிரினங்களை உள்ளடக்கியதாகும். இந்த ஆறு கோஸங்களாகவும் பூர்ணமாக உள்ள நானே இருக்கிறேன்.

6-26 ஆத்யே கோசே ஸ்வயம் தேவ: த்ரிதைவாஹந்தயா ஸ்தித:
பஞ்சஸ்வந்யேஷு கோசேஷு ஜீவா நாநாவிதா: ஸ்திதா:

**பொருள் -** முதல் கோசமான சக்தி கோசத்தில் வாஸுதேவன் மற்ற மூன்று வ்யூஹங்களின் அஹந்தையாக உள்ளான் (மூன்று வ்யூஹம் – ஸங்கர்ஷணன், ப்ரத்யும்நன், அநிருத்தன்) மற்ற ஐந்து கோசங்களில் ஜீவன்கள் பலவிதமாக உள்ளன.

6-27 சுப அசுப விபாகோத்தாம் பஜந்தே விவிதாம் தசாம்
திவ்யாஸ்திஸ்ர: த்ரயரஸ்தாஸாம் மிதுநாநிச யாநி து

**பொருள் -** அந்த ஜீவன்கள் தங்களது புண்ணியபாவச் செயல்களுக்கு ஏற்ப பலன்களை அனுபவிக்கின்றனர். இந்தக் கோசங்களில் இருந்து மூன்று திவ்யசரீரங்களும், மூன்று ஆண்-பெண் ஜோடிகளும் வெளிவருகின்றனர்.

6-28 அண்ட மத்யே அவதாராச்ச தாஸாம் தேஷாம் ச யே ஸ்ம்ருதா:
ஸ்வாதந்த்ர்ய நிர்மிதாஸ்த்வேதே ந ஏவ கர்ம வசானுகா:

**பொருள் –** அண்டத்தின் நடுவில் நிகழ்வதான அவர்களது அவதாரங்களும், அவர்களது படைப்புகளும் எனது சுதந்திரத்திற்கு உட்பட்டதால் நிகழ்கிறது. இந்த உற்பத்தி என்பது அவர்களது புண்ணிய பாவ கர்மங்களால் உண்டானது அல்ல.

6-29 அப்ராக்ருதாச்ச தே தேஹா உபயேஷாம் ப்ரகீர்த்திதா:
அந்யே பஞ்சஸு கோசேஷு தேவாத்யா: ஸ்தாவராந்திமா:
6-30 நாநாஸ்தாநஜுஷோ ஜீவா: கர்மபி: ஸம்ஸரந்தி யே
அதிகாராக்ஷயம் நீத்வா சுபபாக வசாதிமே
6-31 ஸம்ப்ராப்ய ஜ்ஞாந பூயஸ்த்வம் யோக்க்ஷபிதகல்மஷா:
ஆரோஹந்தி சனை: கோசநாரூடா ந பதந்தி தே

**பொருள் -** இப்படியாக வெளிவரும் தேவதைகளின் சரீரமானது உலகியல் பொருள்களால் ஆனது அல்ல. ஐந்து கோசங்களில் உள்ள ஜீவன்கள், நான்முகன் தொடங்கி புல்பூண்டு வரை தங்களது கர்மத்திற்கு ஏற்ப சரீரம் பெறுகின்றனர். இது ”ஒரு பிறவி, மற்றொரு பிறவி” என்று தொடர்கிறது. தர்மத்தின் வழி நிற்கும் வாழ்க்கை மூலமாக இவர்களில் சிலர் தங்களது கர்மபலன்களைக் கைவிடக்கூடும். இவர்களது யோகமானது இவர்களின் பாவங்களை நீக்குகிறது. அதன் பின்னர் இவர்களுக்கு அபரிதமான ஞானம் வந்து சேர்கிறது. அதன் பின்னர் அவர்கள் இந்தக் கோசங்களில் மேலே மேலே ஏறிச் செல்கின்றனர். அவர்களுக்குக் கீழே விழுதல் இல்லை.

6-32 ஸத்யலோகாத் ப்ரப்ருத்யேதே யாம் பூமிம் அதிரோஹிதா:
புநஸ்தே ந நிவர்த்தந்தே திஷ்டந்தி ஊர்த்வம் வ்ரஜந்தி வா

**பொருள் -** இப்படியாகச் செல்லும் அவர்கள் ஸத்யலோகத்தை அடைகின்றனர். அங்கிருந்து அவர்கள் மீண்டும் பூமிக்குத் திரும்புவதில்லை. அங்கேயே தங்கிவிடுகின்றனர் அல்லது மேலே செல்கின்றனர்.

6-33 க்ஷீரோத ஸம்பவே தேவி பத்மநாப குடும்பிநி
ஜீவ: கோ நாம தத் ப்ரூஹி நமஸ்தே பத்மஸம்பவே

**பொருள் -** "தாமரையில் உதித்தவளே! திருப்பாற்கடலில் தோன்றியவளே! பத்மநாபனுடைய பத்னியே! உன்னை வணங்குகின்றேன். ஜீவன் என்பது யார் என்பதை விளக்குவாயாக", என்று இந்திரன் மஹாலக்ஷ்மியிடம் கேட்டான்.

6-34 பூர்ணாஹந்தா ஹரேராத்யா ஸ அஹம் ஸர்வேச்வரீ பரா
தஸ்யா: ஸம்ருதாச்ச தஸ்த்ரோ மே தசா: த்ரிதசாபுங்கவ

**பொருள் -** மஹாலக்ஷ்மி இந்திரனிடம் கூறத் தொடங்கினாள், "மூன்று உலகங்களின் அரசனே! ஸ்ரீஹரியின் 'நான்' என்ற எண்ணமாக ஸர்வேச்வரியான நானே உள்ளேன். அவனது 'நான்' என்ற எண்ணம் நான்கு நிலையாக உள்ளது.

6-35 ப்ரமாதேதி விதா த்வேகா தத் அந்த:கரணம் பரா
பஹி: கரணாமந்யா ச சதுர்த்தீ பாவபூமிகா

**பொருள் -** எனது அந்த நான்கு நிலைகளின் முதல் நிலை என்பது ப்ரமாதா (அறிபவள் = ஜீவன்) என்பதாகும். எனது இரண்டாவது நிலை மனம், புத்தி, அஹங்காரம் ஆகியவை சேர்ந்த அந்தகரணம் ஆகும். எனது மூன்றாவது நிலை என்பது ஞான இந்த்ரியங்களும் கர்ம இந்திரியங்களும் இணைந்த கரணம் என்பதாகும். எனது நான்காம் நிலை ப்ரமேய ப்ரபஞ்சங்கள் இணைந்த பாவபூமிகா என்பதாகும்.

6-36 ப்ரமாதா சேதந: ப்ரோக்தோ மத்ஸங்கோச: ஸ உச்யதே
அஹம் ஹி தேச காலாத்யை: அபரிச்சேதமீயுஷீ
6-37 ஸ்வாதந்த்ர்யாதேவ ஸங்கோசம் பஜாமய ஜஹதீ ஸ்வதாம்
ப்ரதமஸ்தத்ர ஸங்கோச: ப்ரமாதேதி ப்ரகீர்த்யதே

**பொருள் -** இதில் ப்ரமாதா என்பது சேதனர்களைக் குறிக்கும். நான் எனது இயல்பாகவே காலதேசங்களால் அளவிடப்படாதவளாக உள்ளபோதிலும், என்னுடைய சுதந்திரம்

காரணமாக இது போன்ற நிலைகளில் என்னைக் கட்டுப்படுத்திக் கொள்கிறேன். இப்படிச் செய்தாலும் என்னுடைய ஸ்வரூபத்தை நான் கைவிடுவதில்லை. இப்படிப்பட்ட எனது முதல் நிலை ப்ரமாதா எனப்படும்

6-38 சித் ஆத்மநி யதா விச்வம் மயி லீநம் அவஸ்திதம்
ப்ரமாதரி தத் ஏவ ஏதத் தர்பணோதர சைலவத்

**பொருள் -** இந்த உலகம் முழுவதும் என்னுள் அடங்கி உள்ளது. இது போன்றே ப்ரமாதா என்ற நிலைக்குள்ளும் இந்த உலகம் அடங்கியுள்ளது. ஒரு கண்ணாடிக்குள் மலை அடங்குவது போன்று ப்ரமாதாவுக்குள் இந்த உலகம் உள்ளது.

6-39 ஏக ரூப்யம் த்விரூபத்வம் த்ரிரூபத்வம் சதுர்பிதாம்
ஸப்த பஞ்சக ரூபத்வம் ப்ரமாதா யத் ப்ரபத்யதே

**பொருள் –** ஜாக்ரத் (விழிப்பு), ஸ்வப்னம் (கனவுடன் கூடிய உறக்க நிலை), ஸுஷுப்தி (ஆழ்ந்த உறக்கம்) மற்றும் தூரியம் (மயக்க நிலை) முதலான 35 நிலைகள் ஜீவனுக்கு உள்ளது.

6-40 ப்ரகாசேநாத்மனோ ஹி ஏகோ க்ராஹ்ய க்ராஹ கதாவசாத்
த்வைரூப்யம் தத் த்ரீருபத்வம் ஞானாகார க்ரியாத்மநா
6-41 ஸப்தபஞ்சக ரூபத்வம் தத்தத் தத்வஸ்திதை ஸ்திதம்

**பொருள் -** தன்னை மட்டுமே வெளிப்படுத்தும்போது ஜீவன் ஒருவனாக உள்ளான். தன்னையும் மற்றவற்றையும் அறியும்போது இரண்டாகிறான். ஞானம், ஞானத்தால் அறியப்படும் வஸ்துக்கள், ஞானம் மூலம் உண்டாகும் விவேகம் ஆகியவற்றால் மூன்றாகிறான். இப்படியாக ப்ரபஞ்சத்தின் தத்வங்களைச் சேர்த்துப் பார்க்கும்போது ஜீவனுக்கு 37 நிலைகள் உள்ளன.

6-41 காநி தத்வாநி பத்மாக்ஷி கதி கீத்ருக்விதாநி ச
6-42 ஏதத் ப்ருஷ்டா மயா ப்ரூஹி நமஸ்தே ஸிந்து ஸம்பவே

**பொருள் -** இந்திரன் மஹாலக்ஷ்மியிடம், “தாமரை போன்ற கண்கள் உடையவளே! உன்னால் கூறப்படும் 37 தத்துவங்கள் எவை? அவற்றின் தன்மைகள் என்ன? திருப்பாற்கடலில் உதித்தவளே! உன்னை வணங்கிக் கேட்கும் எனக்கு இதனை விளக்குவாயாக”, என்றான்.

6-42 ஸ்தூல ஸூக்ஷ்ம விபேதேந பூதாநி தச குணி ச
6-43 ஜ்ஞான கர்ம விபேதேந த்ரீண்யத:கரணாநி ச
ப்ரக்ருதிச்ச ப்ரஸூதிச்ச மாயா ஸத்வம் ரஜஸ் தம:
6-44 காலாச்ச நியதி: சக்தி: புருஷ: பரமம் நப:
பகவாந் இதி தத்வானி ஸாத்த்வதா: ஸமகீயதே

**பொருள்** - மஹாலக்ஷ்மி இந்திரனிடம், "ஸ்தூலமாகவும், ஸூக்ஷ்மமாகவும் உள்ள வஸ்துக்கள் பத்து; ஞானஇந்திரியங்கள் மற்றும் கர்மஇந்திரியங்கள் எனப் பத்து; மனம், புத்தி மற்றும் சித்தம் என மூன்று; ஸாத்வதர்கள் கூறுகின்ற ப்ரக்ருதி, ப்ரஸூதி மற்றும் மாயா என்னும் மூன்று; ஸத்வ ரஜஸ் தமோ என மூன்று; காலம், நியதி, சக்தி, புருஷன் பரம், நபம் மற்றும் பகவான் என மற்றவை" என்று கூறினாள்.

6-45 மயா ச்ருதாநி தத்வாநி த்வத் வக்ர ஸரஸீருஹாத்
வ்யாசக்ஷ்வைதாநி மே தேவி நமஸ்தே ஸரஸீருஹே

**பொருள்** - இந்திரன் மஹாலக்ஷ்மியிடம், "தாமரையில் உதித்தவளே! உன்னை வணங்குகின்றேன். தாமரை போன்ற உன்னுடைய திருவாய் மூலம் இந்த தத்துவங்கள் பற்றி அறிந்தேன். இதனை எனக்கு விளக்குவாயாக", என்று விண்ணப்பித்தான்.

ஆறாம் அத்யாயம் ஸம்பூர்ணம்